# மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம், திருவாரூர் மாவட்டம்.

## வேலை வாய்ப்பு - விளம்பர அறிவிப்பு

திருவாரூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் உள்ள கீழ்கண்ட காலிபணியிடத்தை நிரப்ப தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பணியின் பெயர் | அலுவலக உதவியாளர் | பணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| சம்பள விகிதம் | 15700 – 50000 (Level 1) | |
| குறைந்தபட்ச கல்வி தகுதி | 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் | |
| இட ஒதுக்கீடு | பொதுப்பிரிவு – முன்னுரிமை (அனைத்து வகுப்பினரும் முன்னுரிமையுள்ளவர்கள்) | 1 |
| வயது வரம்பு | OC. 18-32<br>BC, MBC, BCM. 18-34<br>SC, SCA, ST. 18-37 | |
| | **மொத்த காலியிடம்** | 1 |

<u>வயது வரம்பு</u>:- 01.07.2023–ல் குறைந்தபட்சம் 18 வயது நிரம்பியிருக்க வேண்டும். அதிகபட்ச வயது 37–க்குள் இருக்க வேண்டும்.

மாதிரி விண்ணப்பம் மற்றும் விவரங்கள் https://tiruvarur.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மேலே கூறிய தகுதிகள் உள்ள நபர்களிடமிருந்து வருகின்ற 21.06.2023 மாலை 05.30 மணிக்கு முன்பாக உரிய ஆவணங்களின் சுய சான்றிட்ட நகல்களுடன் புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பத்தினை **"தலைவர், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம், எண்.52, குமரன் கோவில் தெரு, திருவாரூர்"** என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அஞ்சல் உறையின் மேல் **"வேலைவாய்ப்பு விண்ணப்பம் – அலுவலக உதவியாளர்"** என குறிப்பிடவும்.

**தலைவர்,**
**மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்,**
திருவாரூர்.

## விண்ணப்ப படிவம்

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | |
| 2. பாலினம் | : ஆண்/ பெண் /திருநங்கை | |
| 3. தகப்பனார்/ கணவர் பெயர் | : | |
| 4. வயது | : | |
| 5. பிறந்த தேதி | : | |
| 6. தேசிய இனம் | : | |
| 7. மதம் | : | |
| 8. இனப்பிரிவு மற்றும் ஜாதிச்சான்றிதழ் (சான்றிதழ்இணைக்கப்படவேண்டும்). | : | |
| 9. முகவரி | : | |
| 10 .விண்ணப்பிக்கும் பதவி | : | |
| 11. கல்வித் தகுதி | : | |
| 12. வாகன ஓட்டுநர் உரிமம் போன்ற மற்ற தகுதிகள் | : | |
| 13. விண்ணப்பதாரர் மீது முதல்தகவல் அறிக்கை(FIR) அல்லது குற்ற வழக்கு நிலுவையில் உள்ளதா ? ஆம் எனில் அதன் விபரங்கள் | : | |
| 14. அலைபேசி எண்(Mobile No) | : | |

புகைப்படம்

நான் த/க/பெ ஆகிய என்னால் மேலே சொல்லப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

மனுதாரரின் கையொப்பம்

நாள்:-
இடம்:–

**குறிப்பு:–**
விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, வயது, முகவரி மற்றும் சாதி சான்றிதழ் ஆகியவற்றிற்கான ஆவணங்களின் நகல்கள் சுயசான்றொப்பம் செய்து அனுப்பப்படவேண்டும்.
**விண்ணப்பங்கள் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.**

## விண்ணப்பத்தாரர்களுக்கான நிபந்தனைகள்

1. வயது : 01.07.2023அன்று 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். அரசாணை (நிலை) எண். 91 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை நாள் 13.09.2021–ன் படி வயது உச்ச வரம்பு 30 ஆண்டுகளிலிருந்து 32 ஆண்டுகளாக உயர்த்தப்படுகிறது. பொதுபிரிவினருக்கு 32 வயது மிகாமலும் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டவகுப்பினர் 34 வயதுக்கு

மிகாமலும் அருந்ததியர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் **37** வயதுக்குமிகாமலும் இருக்கவேண்டும்.

**2.** விண்ணப்பங்கள்அதற்கான படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, பதிவு தபால் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**3.**புகைப்படத்தை விண்ணப்பத்தில் அதற்கென குறிப்பிட்டுள்ள இடத்தில் ஒட்டவேண்டும். புகைப்படத்தின் மேல்புறம் சுய சான்றொப்பமிட வேண்டும். புகைப்படத்தை விண்ணப்பத்தில் பின் அடித்து இணைக்கக் கூடாது.

**4.**உரிய முறையில் சுய சான்றொப்பமிட தேவையான சான்றாவனங்களின் நகல்களை மட்டுமே விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கப்படக் கூடாது.

**5.**முழுவதுமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களோடு, தங்களுடைய சுயவிலாசமிட்ட ரூ.**50/–** க்கானஅஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட உறையை சேர்த்து இவ்வலுவலகத்திற்கு பதிவுத் தபால் மூலமாக **21.06.2023** மாலை **5.30** மணிக்குள் கிடைக்கத்தக்க அளவில் கீழ் கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**21.06.2023** அன்று மாலை **5.30** மணிக்கு மேல்வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். நேர்காணல் மூலமாக மேற்கண்ட காலியிடம் நிரப்பப்படும்.

**6.** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:–

**தலைவர், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம், எண் : 52, குமரன்கோவில் தெரு, திருவாரூர். 610 001.**

**7.**முழுமையாக பூர்த்தி செய்யப்படாத, விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

**8.**விண்ணப்பத்தரார்களின் அடையாளம் மற்றும் இருப்பிட சான்றுக்காக கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் புகைப்பட நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். (ஓட்டுநர் உரிமம், பான் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை)

பின் குறிப்பு : நேர்காணல் தேதியும் ,/ நேரமும் தங்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும.

நாள்:-01.06.2023
இடம்:– திருவாரூர்

தலைவர்
மாவட்டநுகர்வோர் குறைதீர் ஆணையம்
திருவாரூர்.